அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதங்கள்: 02/2013

எனது இலக்கம்:- EST-2/POLCY/03/0798
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2013.06.21

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>அரச கரும மொழிகள் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்</u>**

அரச அலுவலர்களினால் அரச கரும மொழிகள் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்வதற்குரிய அமைச்சரவைச் செயலாளரின் தலைமையின் கீழான குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் 2013.06.20 ஆந்திகதிய கூட்டத்தில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது பற்றியும், அதற்கமைய அரச கரும மொழிகள் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்குரிய 07/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் திருத்தங்களை இற்றைப்படுத்தி திருத்துதல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது பற்றியும் அமைச்சரவைச் செயலாளரினால் எனக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

02. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முன்மொழிவானது சில அரச அலுவலர்களுக்கு இரண்டாவது அரச மொழி தொடர்பான எழுத்து மூலமான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்வதற்காக மாற்றுத் தகைமை ஒன்றாக குறிப்பிடப்பட்டுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியம் /தமிழ் மொழியும் இலக்கியமும் பிரதான பாடம் ஒன்றினை (பிரதான பாடம் ஒன்றாக) சித்தியடைவதற்குப் பதிலாக க.பொ.த. (சா/த) சிங்களம் அல்லது தமிழ் மொழியில் "இரண்டாவது மொழி" பாடத்தில் சித்தியடைவதனை ஏற்றுக் கொள்வது என்பதாகும். மேலும் ஏனைய அரச அலுவலர்களுக்கும் அவர்கள் தமது சுய விருப்பின் பேரில் முன்வருவார்களாயின், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சைக்குப் பதிலாக மாற்றுத் தகைமையொன்றாக க.பொ.த. (சா/த) இரண்டாவது மொழி சிங்களம்/தமிழ் பாடத்தில் சித்தியடைவதன் மூலம் உரிய எழுத்துமூலத் தேர்ச்சித் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்து கொள்ளவும் இயலுமை உள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் 2013 டிசம்பர் மாதம் நடாத்தப்படும் க.பொ.த. (சா/த) பரீட்சைக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2013 யூலை மாதம் 05 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது தொடர்பாகவும் உரிய அலுவலர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதாயின் அது விரும்பத்தக்கது.

03. மேற்படி முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட அறிக்கையின் பரிந்துரையினை உள்ளடக்கிய வகையில் மேற்படி விடயத்திற்குரிய திருத்தப்பட்ட சுற்றறிக்கையொன்று விரைவாக வெளியிடப்படும்.

ஒப்பம்/பீ.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு